# அநுராதபுர கால வெளிநாட்டு வர்த்தகத்தில் இலங்கையின் பண்டைய துறைமுகங்கள் - ஓர் வரலாற்று நோக்கு

LIBRARY
04 SEP 2024
EUSL, SRI LANKA

முழுப் பெயர் : அப்துஸ் ஸலாம் ஆயிஷா

பதிவு இலக்கம் : EU/IS/2017/AC/ 530

சுட்டெண் : CS8230

FAC 1375
Project Report
Library - EUSL

இவ்வாய்வுக் கட்டுரையானது வரலாறு இளங்கலைமாணி சிறப்பு கற்கைநெறியின் இறுதி வருடப் பரீட்சையின் ஓர் அலகாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

வரலாற்றுத்துறை

கலை கலாசார பீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம்

இலங்கை

2023.

## ஆய்வுச் சுருக்கம்

இலங்கையானது மிகவும் தொன்மையான வரலாற்றைக் கொண்ட நாடாகும். இதன் நீண்டகால வரலாற்றில் பல இராசதானிகள் வெளிநாடுகளுடன் வர்த்தக உறவை பேணிவந்தமைக்கு துறைமுகங்கள் முக்கிய காரணமாய் அமைந்தன. அந்தவகையில் அநுராதபுர இராசதானி காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு வர்த்தகத்தில் பண்டைய துறைமுகங்களின் செல்வாக்கானது நூற்றாண்டு காலத் தொன்மைமிக்கது என்பதற்கு தொல்லியல் மற்றும் இலக்கியச் சான்றுகள் ஆதாரமாக காணப்படுகின்றன. புராதன அநுராதபுர காலத்தில் இடம்பெற்ற வெளிநாட்டு வர்த்தகத்தில் இலங்கையின் பண்டைய துறைமுகங்கள் பற்றிய தகவல்களை ஆய்வு செய்து ஆவணப்படுத்துவதை நோக்காக கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அநுராதபுர இராசாதானியில் நிலவிய வெளிநாட்டு வர்த்தகத்தில் முக்கியத்துவம் பெற்ற துறைமுகங்கள் மற்றும் பொருட்கள், அநுராதபுரத்தோடு வர்த்தகத்தினை மேற்கொள்வதற்கு வெளிநாட்டு வணிகர்கள் கையாண்ட உத்திகள், வர்த்தக நடவடிக்கைகளில் அரசு எவ்வாறான பங்களிப்பினை செலுத்தியது போன்ற பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வரலாற்று ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு முடிவுகளை ஒழுங்குபடுத்தி உருவாக்கப்படுகின்ற வரலாற்றியல் ஆய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. அநுராதபுரகாலத்தில் வெளிநாட்டு வர்த்தகத் தொடர்புகள் ஏற்பட்டமைக்கு அதன் அமைவிட முக்கியத்துவம், இலங்கையின் சந்தை முறைகள், பௌத்த சமயத்தின் பரவல், கப்பல் மையமிக்க நாடாக காணப்பட்டமை .இலங்கையில் கிடைத்த தரமான வர்த்தகப் பொருட்கள் என்பன பிரதான காரணிகளாக அமைந்தன. இந்தியாவிற்கு அருகில் இலங்கை அமைந்திருந்தமை, பல பௌத்த துறவிகள், வணிகர்கள் இலங்கைக்கு வந்தமை இதற்குச் சிறந்த சான்றாகும். இலங்கையிலிருந்து ஏராளமான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதுடன், பல பொருட்கள் இறக்குமதியும் செய்யப்பட்டமைக்கான சான்றுகள் மாந்தை, கோகர்ண, ஜம்புகோளப்பட்டணம், உருவெல, கொடவாய போன்ற துறைமுகங்களிலும் அநுராதபுரம், அல்லைப்பிட்டி, யாப்பகுவ, திஸ்மஹாராம, அபயகிரி முதலான பல தொல்லியற் தளங்களிலும் கண்டறியப்பட்டுள்ளன. வணிகர்களின் வருகையால் அநுராதபுர காலத்தில் பல சமூக மாற்றங்கள் சமய, திருமண, மொழி ரீதியில் ஏற்பட்டதுடன் புதிய குடியிருப்புக்களும் ஏற்பட்டன.



திறவுச்சொற்கள்: துறைமுகங்கள், வர்த்தக உறவு, ஏற்றுமதி இறக்குமதி பொருட்கள், அநுராதபுர காலம், சமூக மாற்றம்.

# பொருளடக்கம்


முன்னுரை............................................................................................i

நன்றியுரை............................................................................................ii

சுருக்கக் குறியீட்டு விளக்கம்.............................................................................iii

ஆய்வுச் சுருக்கம்...................................................................................iv

**அத்தியாயம் 01**...................................................................................1-8

1.0 ஆய்வு அறிமுகம்

1.1 ஆய்வுத் தலைப்பு

1.2 ஆய்வின் அறிமுகம்

1.3 ஆய்வின் முக்கியத்துவம்

1.4 ஆய்வின் நோக்கம்

1.5 ஆய்வு வரையறை

1.6 ஆய்வின் கருதுகோள்

1.7 ஆய்வு அணுகுமுறை

1.8 ஆய்வுப் பிரச்சினை

1.9 இலக்கிய மீளாய்வு

1.10 அத்தியாய ஒழுங்கமைப்பு

**அத்தியாயம் 02**...................................................................................09-28

2.0 வர்த்தகம் இடம்பெற்றமைக்கான பின்னணி

2.1 அறிமுகம்

2.2 இலங்கையின் புவியியல் அமைவிடம்

2.3 கப்பல் மையம்

2.4 தரமான வர்த்தகப் பொருட்கள்

**அத்தியாயம் 03**...................................................................................29-50

3.0 வர்த்தகத்தில் துறைமுகங்களின் செல்வாக்கு

3.1 அறிமுகம்

3.2 மகாதித்தை துறைமுகம்

3.3 ஜம்புகோளப்பட்டணம்

3.4 உருவெல

3.5 சக்கரசோபா

3.6 கொடவாய

3.7 கோகர்ண

**அத்தியாயம் 04**..............................................................................................................51-146

4.0 அநுராதபுர கால வெளிநாட்டு வர்த்தகத்தால் ஏற்பட்ட சமூக மாற்றங்களும் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகமும்

4.1 அறிமுகம்

4.2 ஏற்றுமதி வர்த்தகம்

4.3 இறக்குமதி வர்த்தகம்

4.4 வெளிநாட்டு வர்த்தகத்தால் ஏற்பட்ட சமூக மாற்றங்கள்

**அத்தியாயம் 05**..............................................................................................................147-154

5.0 தொகுப்பரை

**உசாத்துணை** ..............................................................................................................155-161

**பின்னிணைப்பு**..............................................................................................................vii-xi